டிஜிட்டல் டெய்லி
# அக்ரி-டாக்டர்
agridoctor.in

கல்யாண்
ஜுவல்லர்ஸ்

Agridoctor.in | 16.03.2025 ஞாயிற்றுக்கிழமை | பக்கங்கள் 26 | RNI No.TNTAM/2012/49602 | Vol.12, Issue : 222 - Madurai | Online Edition

# தமிழக வேளாண் பட்ஜெட் தாக்கல்

சென்னை, மார்ச் 15

தமிழக சட்டப்பேரவையில் வேளாண் நிதிநிலை அறிக்கையை வேளாண் துறை அமைச்சர் எம்.ஆர்.கே பன்னீர்செல்வம் நேற்று தாக்கல் செய்தார்.

தமிழக சட்டப்பேரவையில் பட்ஜெட் கூட்டத்தொடர் நேற்று முன்தினம் தொடங்கியது. இந்நிலையில், நேற்று தமிழக சட்டப்பேரவையில் 2024-25 ஆம் நிதி ஆண்டுக்கான வேளாண் நிதி நிலை அறிக்கையை, வேளாண் துறை அமைச்சர் எம்.ஆர்.கே பன்னீர்செல்வம் தாக்கல் செய்தார். வேளாண் பட்ஜெட்டில் விவசாயிகளுக்கு பயன் தரக்கூடிய பல்வேறு அறிவிப்புகளை அமைச்சர் வெளியிட்டுள்ளார்.



# வேளாண் பட்ஜெட்டில் வெளியான முக்கிய அறிவிப்புகள்!

- மதுரை மல்லிக்கான சிறப்பு திட்டத்தின் கீழ் 3,000 ஏக்கரில் மல்லி செடி வளர்க்க ஊக்குவிக்கப்படும்.
- ரோஜா மலர் சாகுபடியை ஊக்குவிக்க ரூ.1 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.
- இந்திய அளவில் முந்திரி ஏற்றுமதியில் தமிழ்நாடு 2ம் இடம் பிடித்துள்ளது. இதனை ஊக்குவிக்க, ரூ.10 கோடியில் உழவர்கள் மேம்பட முந்திரி வாரியம் அமைக்கப்படும்.
- வெங்காயத்தை சேமித்து வைத்து விற்பனை செய்ய கிடங்கு அமைக்க மானியம் வழங்க ரூ.18 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.
- பாரம்பரிய காய்கறி சாகுபடியை ஊக்குவிக்க, ரூ.2.40 கோடியில் சிறப்புத் திட்டம் செயல்படுத்தப்படும்.




- பனை சாகுபடியை ஊக்குவிக்க பனை மேம்பாட்டு இயக்கத்திற்கு ரூ.1.65 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.
- பலா மேம்பாட்டு இயக்கத்தின் கீழ் புதிய பலா சாகுபடியை ஊக்குவிக்க ரூ.5 கோடி ஒதுக்கீடு.
- காய்கறிகள் விதை தொகுப்பு 15 லட்சம் குடும்பங்களுக்கு 75% மானியத்தில் வழங்கப்படும்.
- பழச் செடி தொகுப்பு 9 லட்சம் குடும்பங்களுக்கு 75% மானியத்தில் வழங்கப்படும்.
- பயிர் வகை விதை தொகுப்பு 1 லட்சம் இல்லங்களுக்கு 75% மானியத்தில் வழங்கப்படும்.

agridoctor.in the Tamil Digital daily published and edited by **M.J.Vasudevan**,
18, Chandrakanthi Nagar, Ponmeni, Bye Pass Road, Madurai - 625 016. Ph. : 4366425.

- புரதச்சத்து நிறைந்த காளாண் உற்பத்தியை ஊக்குவிக்க ஊரக பகுதியில் 5 காளாண் உற்பத்தி நிலையங்கள் அமைக்கப் படும்.

- 2,500 ஏக்கரில் உள்ள சீமை கருவேல மரங்களை அகற்றி மிளகாய் சாகுபடி செய்ய நடவடிக்கை எடுக்கப்படும். விருதுநகர், இராமநாதபுரம் உள்ளிட்ட மாவட்டங்களில் இந்த திட்டம் செயல்படுத்தப்படும்.

- 56 ஒழுங்குறை விற்பனை கூடங்கள் மின்னணு தேசிய வேளாண் சந்தையுடன் இணைக்கப்படும்.

- 500 ஏக்கரில் வெண்ணெய் பழம் சாகுபடி ஊக்கு விக்கப்படும்.

- 50 உழவர் சந்தைகள் தேர்வு செய்யப்பட்டு 10 கோடியில் அடிப்படை கட்டமைப்பு மேம்படுத்தப்படும். வட்டாரங்கள் தோறும் தேர்வு செய்யப்பட்ட மையங்களில் வேளாண் விளை பொருட்கள் விற்பனை செய்யப்படும்.






- உழவர்களுக்கு 10 லட்சம் வரை முதலீட்டு கடன் வழங்கப்படும்.

- மின்சாரம் இணைப்பு இல்லாத உழவர்களுக்கு சூரிய சக்தியால் இயங்கும் பம்பு செட்டுகள் வழங்க ரூ.24 கோடி ஒதுக்கீடு.

- மின் மேட்டார் பம்பு செட்டுகள் அமைக்க மானியம் வழங்க ரூ. 1.50 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

**தலைக் கவசம் உயிர்க் கவசம்**

**முறையாக தலைக் கவசம் அணிவோம்**

அக்ரி-டாக்டர்.காம் பொறுப்புத்துறப்பு (Disclaimer): இந்த மின்னிதழில் வரும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு நாளிதழ் பொறுப்பேற்காது. இதன் உரிமையாளரோ, வெளியீட்டு நிறுவனமோ, வெளியீட்டாளரே, ஆசிரியரோ, மற்ற ஊழியர்களோ எந்த வகையிலும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு பொறுப்பானவர்கள் அல்ல. வாசகர்கள் தாங்களே ஆய்ந்து அறிந்து சுய விருப்பு அடிப்படையில் தீர்மானிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். விளம்பரதாரர்கள், நிறுவனங்களின் பொருட்கள், சேவைகள் போன்றவை குறித்த செய்திகளுக்கும் மேற்கண்ட பொறுப்புத் துறப்பு பொருந்தும் என்பதையும் அறியவும்.



இப்பொழுது தென்னிந்தியாவின் பிரபலமான வாழை இரகங்களின் கன்றுகள் அதிநவீன திசுவளர்ப்பு தொழில்நுட்பத்தில் உங்களுக்காக உருவாக்கி தருகிறது ஜெயின் நிறுவனம்
ஜெயின் ஏலக்கி:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் செவ்வாழை:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் பூவன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 16/-
ஜெயின் மொந்தன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் நேந்திரன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 18/-
முன்பதிவு தொடர்புக்கு :
94425 02396
94422 03387
94425 04480
Jain Tissue-Culture
Better Yield - Greater Profits
JAIN
Jain Irrigation Systems Ltd.
Small Ideas. Big Revolutions.
JAIN HI-TECH PLANT FACTORY
Better Yield - Greater Profits
போக்குவரத்து கட்டணம் கூடுதலாக. (உடுமலையிலிருந்து)
ஏமாற்றத்தைத் தவிர்க்க, உங்கள் தேவைகளை இன்றே முன்பதிவு செய்யுங்கள்.
குறிப்பு: ஜெயின் திசு வளர்ப்பு தாவரங்கள் நோய்த் தாக்கம் இல்லாதவை என்ற போதிலும் நிலத்தில் ஊன்றிய பின்பு நோய் தாக்குதல் ஏற்பட வாய்ப்புள்ளது. அதனால் நோய்த் தாக்கம் ஏற்படாது என்பதற்கோ, விளைச்சல் பாதிக்கப்படாது என்பதற்கோ நிறுவனம் உத்தரவாதம் அளிக்காது.

## ரூ.17 கோடியில் வேளாண் இயந்திர வாடகை மையம் அமைக்கப்படும்

5,000 வேளாண் இயந்திரம் மற்றும் கருவிகள், இ-வாடகை செயலி மூலம் வழங்கப்படும். உழவர்கள் குறைந்த வாடகையில் இயந்திரம் பெற, ரூ.17 கோடியில் வேளாண் இயந்திர வாடகை மையம் அமைக்கப்படும். அனைத்து வேளாண் பணிகளையும் இயந்திரம் ஆக்கும் நோக்கில், ரூ. 3 கோடியில் இது குறித்து உழவர்களுக்கு செயல் விளக்கம் அளிக்கப்படும்.

300 கிராம இளைஞர்களுக்கு மன் அள்ளும் இயந்திரம் மற்றும் வேளாண் இயந்திரங்கள் தொடர்பாக திறன் மேம்பாட்டு பயிற்சி அளிக்கப்படும். வேளாண் வணிகத்துறை மூலம் 100 மதிப்பு கூட்டு அலகு அமைக்கும் சிறப்பு திட்டம் செயல் படுத்தப்படும்.




## இயற்கை வேளாண்மைக்கான திட்டம் 37 மாவட்டங்களில் செயல்படுத்தப்படும்

‘பருத்தி உற்பத்தியை அதிகரிக்க, ரூ. 12 கோடியில் பருத்தி சாகுபடி திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்படும்‘, ‘1 லட்சம் ஏக்கரில், ரூ.12 கோடியில் மாற்று பயிர் சாகுபடி திட்டம் செயல்படுத்தப்படும். ரூ.15 கோடியில், 7 அரசு விதை சுத்திகரிப்பு நிலையம் அமைக்கப்படும். உழவர் உற்பத்தியாளர்கள் நிறுவனம் மூலம் 3,000 மெட்ரிக் டன் விதைகள் சுத்திகரிப்பு செய்யப்பட்டு கொள்முதல் செய்யப்படும்‘, ‘நவீன வேளாண் கருவிகளை கண்டுபிடிப்பவர்களுக்கு பரிசுகள் வழங்கப்படும். அதிக உற்பத்தி செய்யும் உழவர்களுக்கு விருது வழங்க ரூ. 55 லட்சம் ஒதுக்கீடு. நம்மாழ்வார் விருது திட்டம் இந்த ஆண்டும் செயல்படுத்தப்படும் ‘ஒருங்கிணைந்த பண்ணையம் உள்ளிட்ட திட்டங்களில் ஆதிதிராவிட மற்றும் பழங்குடியின உழவர்களுக்கு கூடுதல் மானியம். தற்போதுள்ள 40% மானியம் 60%-ஆக உயர்த்தி வழங்கப்படும். இயற்கை வேளாண்மைக்கான திட்டம் ரூ. 12 கோடியில், 37 மாவட்டங்களில் செயல்படுத்தப்படும்.

## கோவை ஆர்.எஸ்.புரம் உழவர் சந்தை விலை விபரம் 13.03.2025

| வ. எண் | காய்கறி விபரம் | குறைந்த பட்சம் | அதிக பட்சம் | வ. எண் | காய்கறி விபரம் | குறைந்த பட்சம் | அதிக பட்சம் |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | கத்திரி(Hybrid) | 16 | 20 | 56 | காளான் (சிப்பி/பட்டன்)200GM | 35 | 40 |
| 1A | கத்திரி(Simron) | 16 | 20 | 57 | உருளை (பிற) | 18 | 22 |
| 1B | கத்திரி(Nadu) | 22 | 28 | 57A | உருளை(ஊட்டி) | 20 | 36 |
| 2 | வெண்டை | 34 | 38 | 58 | மேரக்காய் | 16 | 22 |
| 3 | தக்காளி (நாடு) | 10 | 13 | 59 | முள்ளங்கி(சிவப்பு) | 20 | 25 |
| 4 | தக்காளி ஆப்பிள் | 10 | 14 | 60 | கேரட் | 44 | 50 |
| 5 | அவரை(பிஸ்கட்) | 38 | 42 | 61 | பீட்ரூட் (ஊட்டி) | 55 | 60 |
| 6 | புடலை | 22 | 28 | 62 | நூல்கோல் | 20 | 25 |
| 7 | பீர்க்கன் | 30 | 36 | 63 | டர்னிப் | 35 | 40 |
| 8 | சுரைக்காய் | 12 | 16 | 64 | மு.கோஸ் | 14 | 18 |
| 9 | பாகற்காய் | 25 | 30 | 65 | மு.கோஸ்(கலர்) | 25 | 30 |
| 10 | கொத்தவரை | 30 | 35 | 66 | காளிபிளவர் | 25 | 30 |
| 11 | பூசணி | 12 | 15 | 67 | பட்டாணி | 70 | 74 |
| 12 | அரசாணி | 12 | 15 | 68 | பூண்டு | 80 | 100 |
| 13 | ப.மிளகாய்(சம்பா) | 20 | 26 | 69 | இஞ்சி | 40 | 50 |
| 14 | ப.மிளகாய்(Bullet/Nadu) | 20 | 26 | 70 | புருக்கோலின் | 90 | 100 |
| 15 | சி.வெங்காயம் | 30 | 36 | 71 | பென்னி பீன்ஸ் | 60 | 64 |
| 16 | பெ.வெங்காயம் | 24 | 28 | 72 | குடமிளகாய் | 40 | 46 |
| 17 | த.பயறு(வெள்ளை) | 20 | 25 | 73 | ஊட்டி அவரை | 100 | 110 |
| 18 | பச்சை மொச்சை | 50 | 55 | | | | |
| 19 | முருங்கை | 50 | 56 | | | | |
| 20 | தேங்காய் | 58 | 62 | | | | |
| 21 | மாங்காய் | 55 | 85 | | | | |
| 22 | வாழைக்காய் | 35 | 40 | | | | |
| 23 | சேனைகிழங்கு | 40 | 48 | | | | |
| 24 | கருணைகிழங்கு | 58 | 62 | 75 | எலுமிச்சை | 70 | 80 |
| 25 | சேப்பங்கிழங்கு | 50 | 58 | 76 | கொய்யா (வெள்ளை/சிவப்பு) | 40 | 50 |
| 26 | மரவள்ளி | 30 | 34 | 77 | சப்போட்டா | 45 | 50 |
| 27 | சர்க்கரைவள்ளி | 30 | 38 | 78 | பப்பாளி | 35 | 40 |
| 28 | கறிவேப்பிலை | 70 | 76 | 79 | மாதுளை | 120 | 200 |
| 29 | கொத்தமல்லி | 40 | 45 | 80 | திராட்சை | 90 | 100 |
| 30 | புதினா | 5 | 6 | 81 | மாம்பழம் | 120 | 180 |
| 31 | அகத்திக்கீரை | 12 | 15 | 82 | ஆப்பிள் (சிம்லா/காலா) | 140 | 220 |
| 32 | தண்டுக்கீரை | 12 | 15 | 83 | ஆரஞ்ச் | 80 | 100 |
| 33 | சுக்கிட்டி&வெந்தயக்கீரை | 18 | 20 | 84 | சாத்துக்குடி | 40 | 60 |
| 34 | அரைக்கீரை | 12 | 15 | 85 | அன்னாசி பழம் | 50 | 58 |
| 35 | சிறுகீரை | 12 | 15 | 86 | சீதாப்பழம் | 45 | 50 |
| 36 | பாலாக்கு | 12 | 15 | 87 | முலாம்பழம் | 30 | 40 |
| 37 | பருப்புக்கீரை | 12 | 15 | 88 | தர்பூசணி | 15 | 18 |
| 38 | முருங்கைக்கீரை | 8 | 10 | 89 | பலாப்பழம் | | |
| 39 | வல்லாரை | 8 | 10 | 90 | கதளி | 60 | 70 |
| 40 | கோவக்காய் | 30 | 34 | 91 | பூவன் | 40 | 45 |
| 41 | வாழைத்தண்டு | 5 | 10 | 92 | ரஸ்தாளி | 50 | 58 |
| 42 | வாழை இலை | 4 | 5 | 93 | கற்பூரவள்ளி | 50 | 54 |
| 43 | வாழைப்பூ | 10 | 15 | 94 | மோரிஸ் | 40 | 45 |
| 44 | முட்டைகோஸ் (உள்ளூர்) | 12 | 16 | 95 | நாடன் | 45 | 50 |
| 45 | வெள்ளரி | 25 | 28 | 96 | நேந்திரன் | 60 | 64 |
| 46 | பீட்ரூட் (உள்ளூர்) | 14 | 18 | 97 | செவ்வாழை | 80 | 90 |
| 47 | சுண்டக்காய் | 150 | 160 | 98 | பேரிக்காய் | 150 | 160 |
| 48 | வெங்காயத்தாள் | 8 | 10 | 99 | நார்த்தங்காய் | 40 | 45 |
| 49 | காளிபிளவர் (உள்ளூர்) | 20 | 24 | 100 | கறிப்பலா | 40 | 45 |
| 50 | நிலக்கடலை | 55 | 65 | 101 | டிராகன் ப்ரூட் | 140 | 150 |
| 51 | மக்காச்சோளக்கதிர் | 25 | 28 | 102 | நெல்லிக்காய் | 60 | 70 |
| 52 | புளி | 135 | 145 | 103 | Seedless திராட்சை(ப/க) | 120 | 160 |
| 53 | ஸ்வீட் கான் | 32 | 36 | | | | |
| 54 | இளநீர்(சிறியது/பெரியது) | 27 | 30 | | | | |
| 55 | முள்ளங்கி(வெள்ளை) | 16 | 20 | | | | |

## கடந்த 4 ஆண்டுகளில் 346 மெட்ரிக் டன் உணவு தானியம் உற்பத்தி

கடந்த 4 ஆண்டுகளில், மொத்த சாகுபடி பரப்பு 151 லட்சம் ஏக்கராக உயர்ந்துள்ள நிலையில், 346 மெட்ரிக் டன் உணவு தானியம் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. 1.86 லட்சம் மின் இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளன. வேளாண் இயந்திரம் வழங்குதல் திட்டத்தின் கீழ் ரூ. 510 கோடி செலவில் மானிய விலையில் இயந்திரம் வழங்ப்பட்டுள்ளன. வேளாண் பட்டதாரி களை வேளாண் தொழில் முனைவோர்களாக ஆக்கும் திட்டத்தில் 431 இளைஞர்கள் தொழில் முனைவோர்களாக மாறி உள்ளனர். அவர்களுக்கு தலா ரூ.1 லட்சம் மானியம் வழங்கப்பட்டுள்ளன.




2021-24 வரை, 147 லட்சம் டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. டெல்டா மாவட்டங்களில் நீர் பாசன பகுதிகளில் கால்வாய்களை தூர்வாரியதால், 89.90 லட்சமாக இருந்த பாசன பகுதி 96 லட்சம் ஏக்கராக உயர்ந்துள்ளது. கரும்பு விவசாயிகளுக்கு டன் ஒன்றுக்கு 215 ஊக்கத் தொகை வழங்கப்பட்டுள்ளது. 30 லட்சம் உழவர்களுக்கு பயிர் காப்பீட்டு தொகை வழங்கப்பட்டுள்ளது. பயிர் கடன் ரூ. 3.58 லட்சம் கோடியாக உயர்ந்துள்ளது.

## கரும்புக்கான ஊக்க தொகை ரூ.215ல் இருந்து ரூ.349 ஆக உயர்வு!

கரும்புக்கான ஊக்க தொகை ரூ.215ல் இருந்து ரூ.349 ஆக உயர்த்தபட்டுள்ளதாக கூறினார். மேலும் கரும்பு டன் ஒன்றுக்கு 3500 வழங்கப்படும் எனவும், இதற்காக ரூ. 297 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் கூறினார். தொடர்ந்து பேசிய அவர், இயற்கை வேளாண்மைக்கான திட்டம் ரூ. 12 கோடியில், 37 மாவட்டங்களில் செயல்படுத்தப்படும்.

தமிழ்நாட்டின் இயற்கை வேளாண்மை பொருட்களை சந்தைபடுத்த அரசு கட்டிடங்களில் வசதி ஏற்படுத்தி தரப்படும்.


100% LEAD FREE PIPE
Rithvik Pipe
25 YEARS WARRANTY
PVC PIPES | PLUMBING PIPES | UPVC PIPES | CONDUIT PIPES | BOREWELL PIPES
WATER TANKS
இந்தியாவின்
தலைச்சிறந்த ISI PVC PIPE
இந்த QR CODE - ஐ SCAN செய்து உங்களது PVC PIPE TEST REPORT SAMPLE - ஐ பெற்றுக்கொள்ளுங்கள்
Rithvik Pipe 63mm 0.4 MPa Class-2 (4.0Kg/cm
ஈடில்லா பலம்
குறைவில்லா தரம்
மேலும் விவரங்களுக்கு
9645877721

சிறு தானிய இயக்கத்தை செயல்படுத்த ரூ. 52 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. சூரியகாந்தி, ஆமணக்கு எண்ணெய் உள்ளிட்ட வித்து பயிர்கள் வளர்ச்சியை அதிகரிக்கும் விதமாக, 2 லட்சம் ஏக்கர் பரப்பில் ரூ. 108 கோடி மதிப்பில் திட்டங்கள் செயல்படுத்தப்படும். இதன் மூலம், 7.14 லட்சம் ஏக்கர் பரப்பளவில் 90 ஆயிரம் விவசாயிகள் பயன்பெறுவர். ஒருங்கிணைந்த பண்ணையம் உள்ளிட்ட திட்டங்களில் ஆதிதிராவிட மற்றும் பழங்குடியின உழவர்களுக்கு கூடுதல் மானியம் வழங்கப்படும். தற்போதுள்ள 40% மானியம் 60%-ஆக உயர்த்தி வழங்கப்படும் என கூறினார்.




**1000 முதலமைச்சர் உழவர் நல சேவை மையங்கள் அமைக்கப்படும்**

டெல்டா அல்லாத மாவட்டங்களில் பயிர் சாகுபடி அதிகரிக்க சிறப்பு தொகுப்பு திட்டத்திற்கு ரூ. 102 கோடி ஒதுக்கீடு. தரமான விதைகள் வழங்க ரூ. 52 கோடி நிதி ஒதுக்கீடு. 3 லட்சம் ஏக்கரில் கோடை உழவு செய்ய ரூ. 24 கோடி மானியம் வழங்கப்படும். 1000 முதலமைச்சர் உழவர் நல சேவை மையம் அமைக்க ரூ.42 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 63 ஆயிரம் மலைவாழ் உழவர்கள் பயனடையும் வகையில் ரூ. 22.80 லட்சம் மானியம் வழங்கிடப்படும். இத்திட்டத்துக்கு ரூ. 22 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. முதலமைச்சர் உழவர் பாதுகாப்பு திட்டத்தின் கீழ் வழங்கப்படும் நிதி உதவி உயர்த்தி வழங்கப்படும்.

நிலமற்ற வேளாண் தொழிலாளர்களுக்கு விபத்து மரணத்திற்கான இழப்பீடு ரூ.1 லட்சத்திலிருந்து ரூ. 2 லட்சமாக உயர்த்தப்பட்டுள்ளது. இயற்கை மரணத்திற்கான நிதி ரூ.20,000ல் இருந்து ரூ.30,000 உயர்த்தப்படும். இறுதி சடங்கு நிதி உதவி ரூ. 2,500ல் இருந்து ரூ. 10,000 உயர்த்தப்படும். முதல் அமைச்சர் மன்னுயிர் காப்போம் திட்டம், ரூ. 146 கோடி செலவில் இந்த ஆண்டும் செயல்படுத்தப்படும். கலைஞர் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வளர்ச்சி திட்டம் 2,335 ஊராட்சியில் ரூ.269 கோடியில் செயல்படுத்தப்படும். ஏற்கனவே இத்திட்டம் 10,157 கிராமங்களில் செயல்படுத்தப்பட்டது என கூறினார்.

# விதைச்சான்றளிப்பு மற்றும் SATHI Portal வலைதள பயன்பாடு குறித்த புத்தாக்க பயிற்சி



மதுரை, மார்ச் 15

மதுரை மாவட்டத்தில் உள்ள விதை உற்பத்தியாளர்களுக்கு விதைச் சான்றளிப்பு மற்றும் உயிர்மச் சான்றளிப்பு நடைமுறைகள் குறித்த புத்தாக்க பயிற்சி மதுரை வேளாண்மை இணை இயக்குநர் வளாகத்தில் உள்ள கூட்ட அரங்கில் விதைச்சான்றளிப்புத் துறை சார்பாக ஒரு நாள் பயிற்சி 15.03.25 அன்று நடைபெற்றது.

இப்பயிற்சிக்கு வேளாண்மை இணை இயக்குநர் சுப்புராஜ், தலைமை வகித்து பயிற்சியை துவங்கி வைத்தார். சான்று பெற்ற விதை உற்பத்தி செய்வதன் நோக்கம் மற்றும் சான்று விதைகளின் பயன்பாடு குறித்து விளக்கி உரைத்தார். மதுரை விதைச்சான்றளிப்பு உதவி இயக்குநர் சி.சிங்காரலீனா விதைச் சான்றளிப்பு நடைமுறைகள் விதைப்பண்ணை அமைப்பதில் கவனிக்க வேண்டிய தொழில்நுட்ப கூறுகள் சான்று விதை உற்பத்தியில் விதைப்பண்ணை அமைப்பதில் இருந்து சான்றட்டை பொருத்தும் வரை உள்ள அனைத்து தொழில்நுட்ப கருத்துகளையும் தெளிவாக விளக்கினார்.

மதுரை மாவட்ட விதைச்சான்று அலுவலர் (தொழில்நுட்பம்) முனைவர் க.கண்ணன், புதிதாக பயன்பாட்டுக்கு வர இருக்கும் (Seed Authentication, Traceability, Holistic Inventory) SATHI Portal பயன்பாடு மற்றும் SATHI Portal-ல் விதை உற்பத்தி யாளர்கள் விதைப்பண்ணை குறித்த தரவுகளை உள்ளீடு செய்யும் வழிமுறைகளை விளக்கி கூறினார். இப்பயிற்சியில் மதுரை மாவட்டத்தின் அரசு விதை உற்பத்தியாளர்கள் வேளாண் கல்லூரி மற்றும் தனியார் விதை உற்பத்தியாளர்கள் உள்ளீட்ட 30 விதை உற்பத்தியாளர்கள் பங்குபெற்று SATHI Portal பயன்படுத்துவது தொடர்பாக பயன்பெற்றனர்.

**தலைக் கவசம் உயிர்க் கவசம்**
**முறையாக தலைக் கவசம் அணிவோம்**

# அறுவடை பின்சார் தொழில்நுட்பங்கள் மற்றும் மதிப்பு கூட்டுதல்




திண்டுக்கல், மார்ச் 15

திண்டுக்கல் மாவட்டம், ரெட்டியார்சத்திரம் வட்டாரம், அட்மா திட்டத்தின் கீழ் வேளாண்மை வணிகத்துறை மற்றும் தர கட்டுப்பாடு மூலம் உள் மாநில அளவிலான சுற்றுலா மற்றும் விவசாயிகள் பயிற்சி மதுரை கேவிகே அலுவலகத்தில் தலைவர் டாக்டர் பாலசுப்பிரமணியம் தலைமையில் அறுவடை பின்சார் தொழில்நுட்பங்கள் மற்றும் மதிப்பு கூட்டுதல் காய்கறிகள் மற்றும் பழங்களில் அறுவடை பின்சார் தொழில் நுட்பங்கள் மற்றும் மதிப்பு கூடுதல் பற்றிய விரிவான பயிற்சி மற்றும் செயல் விளக்க உரை வழங்கினார்.




டாக்டர் லாவன்யா பதப்படுத்துதலின் முக்கியத்துவம் பற்றி கூறினார். முனைவர் ஜோதிலட்சுமி, காய்கறி பழங்களில் மதிப்பு கூட்டுதல் உதாரணமாக தக்காளி மதிப்பு கூட்டுதல் வத்தல் போடும் தொழில்நுட்பங்கள் மற்றும் உலர வைக்கும் தொழில் நுட்பங்கள் பற்றிய விபரங்களை விரிவாக எடுத்துரைத்தார். மற்றும் கீரை வகைகள் முருங்கை பதப்படுத்துதல் தொழில் நுட்பங்கள் பற்றியும் விவசாயிகளுக்கு பயன்படும் தொழில் நுட்பங்கள் விளக்க உரை அளிக்கப்பட்டது. மற்றும் தேனீ வளர்ப்பு முறை மற்றும் பதப்படுத்துதல் பற்றி டாக்டர் சுரேஷ் சிறப்பாக கூறினார். இப்பட்டறிவு பயிற்சிக்கான ஏற்பாடுகளை வட்டார தொழில்நுட்ப மேலாளர் சுகன்யா உதவி தொழில்நுட்ப மேலாளர்கள் பொன் தமிழரசு மற்றும் அருண்குமார் ஆகியோர் சிறப்பாக செய்திருந்தனர்.


இப்பொழுது தென்னிந்தியாவின்
பிரபலமான வாழை இரகங்களின்
கன்றுகள் அதிநவீன திசுவளர்ப்பு
தொழில்நுட்பத்தில் உங்களுக்காக
உருவாக்கி தருகிறது ஜெயின் நிறுவனம்
ஜெயின் ஏலக்கி:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் செவ்வாழை:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் பூவன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 16/-
ஜெயின் மொந்தன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் நேந்திரன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 18/-
முன்பதிவு தொடர்புக்கு :
94425 02396
94422 03387
94425 04480
Jain Tissue-Culture
Jain Irrigation Systems Ltd.
Small Ideas. Big Revolutions.
JAIN HI-TECH PLANT FACTORY
Better Yield - Greater Profits.
போக்குவரத்து கட்டணம் கூடுதலாக. (உடுமலையிலிருந்து)
ஏமாற்றத்தைத் தவிர்க்க, உங்கள் தேவைகளை
இன்றே முன்பதிவு செய்யுங்கள்.
குறிப்பு: ஜெயின் திசு வளர்ப்பு தாவரங்கள் நோய்த் தாக்கம் இல்லாதவை என்ற போதிலும் நிலத்தில் ஊன்றிய பின்பு நோய் தாக்குதல் ஏற்பட வாய்ப்புள்ளது.
அதனால் நோய்த் தாக்கம் ஏற்படாது என்பதற்கோ, விளைச்சல் பாதிக்கப்படாது என்பதற்கோ நிறுவனம் உத்தரவாதம் அளிக்காது.

# மீன் சைலேஜ் (FISH SILAGE) தயாரிப்பது எப்படி? பயன்பாடு என்ன?



பொதுவாக அசைவ பிரியர்கள் ஆடு, கோழி கறிகளின் விலை அதிகமாக இருப்பதாலும் உடல் நலத்திற்கு கேடு விளைவிக்காத மீன் வகைகளை உணவாக உண்ணும் பழக்கம் தற்போது அதிகமாக உள்ளது. மீனை உணவாக பயன்படுத்தும் நிறை கழிவுகள் (தலை, குடல், வால் இறக்கை போன்றவைகளை) குப்பைகளில், தெருவோரங்களில் தூக்கி ஏறிகிறோம். இதனால் அவை துர்நாற்றமடித்து, மக்கும் வரை சுற்றுப்புற சூழலை பாதிக்கின்றன. இந்த கழிவுகளை எப்படி உபயோக மான முறையில் பயன்படுத்தி, மதிப்புக்கூட்டப்பட்ட பொருளாக மாற்றி சுற்றுப்புற சூழலியல்கேற்றவாறு செயல் படுத்த மீன் சைலேஜ் முறை சிறந்த முறையாகும். கழிவுகள் சிறந்த கால்நடை தீவனமாகவும் அதே நேரத்தில விவசாயத்திற்கு பயன்படுத்தப்படும் ஆர்கானிக் உரமாக மாறி குறைந்த செலவிலே மண்வளத்தை அதிகரிக்கவும் பயன்படுத்தலாம்.




### சைலேஜ் என்றால் என்ன?

சைலேஜ் என்பது அதிகமாக கிடைக்கின்ற உணவு பொருட்கள், தீவனப்பயிர்கள், மீன் கழிவுகளை பதப்படுத்தி/நொதித்தல் முறையில் (நம்முடைய வீட்டுல ஊறுகாய் போடுவது போல) மாற்றி மதிப்புக்கூட்டப்பட்ட பொருளாக மாற்றி, தட்டுபாடு ஏற்படும் காலங்களில் இதனை பயன் படுத்தும் முறைக்கு தான் சைலேஜ் என்று அழைக்கப் படுகின்றன.

**கழிவுகளை எப்படி சைலேஜ்-யாக மாற்றுவது?**

மீன்கழிவுகளை (தலை, குடல், வால், இறக்கை, முள்) போன்றவற்றை எடுத்து நன்றாக அறைத்து கூழாக்கிட வேண்டும். இதில் சல்பிரிக் அமிலம் / 98% பார்மிக் அமிலத்தை 3% எடை கரைசல் சேர்க்கப்பட்டு, நன்றாக கலக்கி, 48 நாட்கள் நொதித்தல் நடைபெற (FERMENTATION PROCESS) வைத்திருக்க வேண்டும். அந்த சமயத்தில் பாக்டீரியாவின் செயல்பாட்டை கட்டுப்படுத்த கலவையின் PH 4க்கும் குறைவாக இருக்க வேண்டும். சில சமயங்களில் செயற்பாட்டை அதிகரிக்க சர்க்கரை வள்ளி கிழங்கு மொலாசஸ்யும் இதில் சேர்க்கலாம். இதனை ஓரு வருடத்திற்கு மேலாக காற்று புகாமல் சேமித்து பயன்படுத்தலாம். தயாரிப்பு மிக மிக சுலபமானது.

**இதனுடைய முக்கியத்துவம் (IMPORTANT OF FISH SILAGE)**

1) அதிகமான அளவாக புரோட்டின் சத்துகள் 70%க்கு மேலாக உள்ளது. இந்த புரத,சத்துகள் கால்நடை மற்றும் கோழிகளுக்கு தீவனமாக பயன்படுத்தலாம்.

2) தேவையான அளவு அமினோ அமிலங்கள் விட்டமின்கள், தாது உப்புகள் உள்ளன.

3) விலை மலிவாக உள்ளது, அதுமட்டுமல்ல சுற்றுப்புற சூழலியல்கேற்ற தீவனமாகும்.

**பயன்கள்**

ஆடு, மாடு, கோழிகளுக்கு கால்நடை தீவனமாக இதை திரவ நிலை/ SEMI LIQUID பயன்படுத்தலாம். விவசாயத்திற்கு ஆர்கானிக் உரமிட மீன்கழிவு சைலேஜ் பயன்படுத்தபட்டது. அதுமட்டுமல்ல சுற்றுப்புற சூழலியலுக்கு எந்தவிதமான கேடு ஏற்படுத்தாது.

4) மீன் வளர்ப்பில் (AQUA CULTURE) மீன் குஞ்சுகளுக்கு மீன் உணவாக இதை பயன்படுத்தலாம்.

OVER ALL-யாக பார்க்கும் போது, குப்பையில் போட வேண்டிய மீன் கழிவுகளை சேகரித்து உரமாக உங்களுடைய பகுதியில் உள்ள நிலத்திற்கு இயற்கை உரமாக பயன்படுத்தி கூடுதலான மகசூல் பெறலாம்.

எனவே சிறு துளி பெரு வெள்ளம் போல ஆங்காங்கு மீன் பண்ணை மீன் கடை வைத்து இருக்கின்ற விவசாயிகள், சிறந்த முறைகளில் மீன் கழிவுகளை மதிப்புக்கூட்டப்பட்ட பொருளாக மாற்றி நீண்ட நாட்களாக பயன்படுத்த உதவுகிறது இந்த பிஸ் சைலேஜ் (FISH SILAGE) மீன்கழிவுகளை குப்பையில் போடாமல் சேகரிப்பதால் மீன் பண்னணகளில் ஏற்படும் நஷ்டத்தை சில சமயங்களில் குறைப்பதுடன் சுற்றுப்புற சூழலை பாதுகாக்கிறது.

தகவல் : **அக்ரி சு.சந்திரசேகரன், வேளாண் ஆலோசகர், அருப்புக்கோட்டை. 94435 70289.**

# காளான் வளர்ப்பு - ஓர் பார்வை



திருச்சி, மார்ச் 15

ஒருங்கினைந்த வேளாண்மை அலுவலகத்தில் ATMA தலைமையில் காளான் வளர்ப்பு ஒரு நாள் பயிற்சி நடைபெற்றது. இதில் வேளாண்மை அலுவலர் M.விக்னேஷ் குமார் துணை வேளாண்மை அலுவலர் சீனிவாசன் மற்றும் அட்மா வட்டார தொழில்நுட்ப மேலாளர் வரகுண பாண்டியன் முன்னிலை வகித்தனர். இதில் சிறப்பு விருந்தினராக S.விக்னேஷ் (pathologist) M.I.T வேளாண்மை கல்லூரி உதவி பேராசிரியர் காளான் வளர்ப்பின் நன்மைகள், காளான் வளர்ப்பு மற்றும் அதன் பலன்களை எடுத்துரைத்தார்.

பின் தனலட்சுமி சீனிவாசன் பல்கலைக்கழக வேளாண்மை இறுதி ஆண்டு மாணவிகள் காளான் எப்படி வளர்ப்பது என்று விவசாயிகளுக்கு செயல்முறையில் செய்து காண்பித்தனர்.

இதன் மூலம் விவசாயிகள் காளான் வளர்ப்பு பற்றி ஆர்வமுடன் தெரிந்து கொண்டு தனது வீடுகளிலும் காளான் வளர்க்க தொடங்கினார்கள்.

**மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!**


இப்பொழுது தென்னிந்தியாவின்
பிரபலமான வாழை இரகங்களின்
கன்றுகள் அதிநவீன திசுவளர்ப்பு
தொழில்நுட்பத்தில் உங்களுக்காக
உருவாக்கி தருகிறது ஜெயின் நிறுவனம்
ஜெயின் ஏலக்கி:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் செவ்வாழை:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் பூவன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 16/-
ஜெயின் மொந்தன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் நேந்திரன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 18/-
முன்பதிவு தொடர்புக்கு :
94425 02396
94422 03387
94425 04480
Jain Tissue-Culture
Better Yield - Greater Profits.
JAIN
Jain Irrigation Systems Ltd.
Small Ideas. Big Revolutions.
JAIN HI-TECH PLANT FACTORY
Better Yield - Greater Profits.
போக்குவரத்து கட்டணம் கூடுதலாக. (உடுமலையிலிருந்து)
ஏமாற்றத்தைத் தவிர்க்க, உங்கள் தேவைகளை
இன்றே முன்பதிவு செய்யுங்கள்.
குறிப்பு: ஜெயின் திசு வளர்ப்பு தாவரங்கள் நோய்த் தாக்கம் இல்லாதவை என்ற போதிலும் நிலத்தில் ஊன்றிய பின்பு நோய் தாக்குதல் ஏற்பட வாய்ப்புள்ளது.
அதனால் நோய்த் தாக்கம் ஏற்படாது என்பதற்கோ, விளைச்சல் பாதிக்கப்படாது என்பதற்கோ நிறுவனம் உத்தரவாதம் அளிக்காது.

# வெளி மாநில அளவில் அங்கக வேளாண்மை விவசாயிகள் கண்டுணர்வு சுற்றுலா




திருச்சி, மார்ச் 15 திருச்சிராப்பள்ளி மாவட்டம், லால்குடி வட்டாரத்தில் இருந்து அங்கக வேளாண்மை சாகுபடி தொழில்நுட்பங்கள் பற்றி தெரிந்து கொள்ள கர்நாடகா மாநிலத்தில் உள்ள வேளாண்மை பல்கலைக்கழகம் வேளாண்மை அறிவியல் நிலையம் மற்றும் அங்கக வேளாண்மை சான்றிதழ் மண்டல அலுவலகம் 10.03.25 முதல் 14.03.25 வரை 5 நாட்கள் கண்டுணர்வு சுற்றுலா சென்று அங்கக சாகுபடி தொழில் நுட்பங்கள், ஒருங்கிணைந்த பயிர் மேலாண்மை, பூச்சி கட்டுப்பாடு இயற்கை இடு பொருட்களை பயன்படுத்துதல், களை மேலாண்மை, நீர் மேலாண்மை பற்றி நிலைய பேராசிரியர்கள் மற்றும் மண்டல ஆராய்ச்சி நிலைய தலைவர் ஆராய்ச்சி நிலைய குறிக்கோள்கள் மற்றும் செயல்பாடுகள் பற்றியும் விரிவாக விளக்கி கூறினார்கள்.




5 நாட்கள் நடைபெற்ற கண்டுணர்வு சுற்றுலாவில் சிறுமயங்குடி, மருதூர், மும்முடி சோழமங்கலம், நெய்க்குப்பை, வீ.கல்விகுடி, புதூர் உத்தமனூர் கிராமத்தில் இருந்து பல முன்னாடி விவசாயிகள் கலந்து கொண்டு பயன்பெற்றனர்.

இதற்கான ஏற்பாட்டினை லால்குடி வட்டார வேளாண்மை உதவி இயக்குனர் சத்தியப்பிரியா, வேளாண்மை அலுவலர் கௌசல்யா, துணை வேளாண்மை அலுவலர் அய்யாசாமி, வேளாண்மை உதவி அலுவலர்கள் சந்திரசேகர், எடிசன், விஸ்வநாதன், ராஜசேகரன், கவிதா, பிரவீன், அட்மா திட்ட வட்டார தொழில்நுட்ப மேலாளர் சபரி செல்வன், உதவி தொழில் நுட்ப மேலாளர் கார்த்திக் ஆகியோர் செய்திருந்தனர்.

# பங்கேற்பு கிராமப்புற மதிப்பீட்டை நடத்திய வேளாண் கல்லூரி மாணவிகள்



இராமநாதபுரம், மார்ச் 15

இராமநாதபுரம் மாவட்டம், முதுகுளத்தூர் அருகில் அமைந்து உள்ள ஆதங்கொத்தங்குடி கிராம மக்களுடன் பங்கேற்பு கிராமப்புற மதிப்பீட்டை நம்மாழ்வார் வேளாண் தொழில்நுட்ப கல்லூரி மாணவிகள் ஊரக வேளாண் அனுபவ பயிற்சியினை முதன்மையாகக் கொண்டு செய்தனர்.

கிராமப்புற மதிப்பீட்டில் உள்ளூர் பிரச்சினைகள் மற்றும் முதன்மையானவற்றைப் புரிந்து கொள்ள காலக்கோடு, டிரான்செக்ட் நடை, வென்வரைபடம், குறைகள் மரம் போன்ற நுட்பங்களைப் பயன்படுத்தி மேலும் தகவலறிந்த வளர்ச்சித் திட்டமிடலை செயல்படுத்தினர்.

# பூச்சிகளை அழிக்கும் சூரிய ஒளி விளக்கு பொறியின் பயன்பாடு வேளாண்மை கல்லூரி மாணவர்கள் செயல்விளக்கம்



ஈரோடு, மார்ச் 15

ஈரோடு மாவட்டம், ஆப்பக்கூடல் பகுதியைச் சேர்ந்த குமரகுரு வேளாண்மைக் கல்லூரி மாணவர் களான செ.கிருபாகரன், அ.செய்யது சித்திக், க.யஷ்வந்த், செ.கேசவா,ச. தனுஜ், கு.விக்னேஷ்வர் ஆகியோர் கிராமப்புற விவசாய பணி அனுபவத் திட்டத்தினை (RAWE) திருப்பூர் மாவட்டம், அவினாசி வட்டாரத்தில் தங்கி மேற்கொண்டுள்ளனர்.

இதன் ஓர் அங்கமாக, சுண்டக்காம்பாளையம் கிராமத்தில் 12/03/25 அன்று பூச்சிகளை அழிக்கும் சூரிய ஒளி விளக்கு பொறி (Solar Light Trap) பயன்பாடு பற்றிய செயல் விளக்கம் நடத்தினர். இதில் அவினாசி வட்டார வேளாண் விரிவாக்க அலுவலக அதிகாரிகளும் கலந்து கொண்டனர். இதில் சூரிய ஒளி விளக்கு பொறியின் நன்மைகள் மற்றும் பயன்படுத்தும் முறை பற்றி தெளிவாக விவசாயிகளுக்கு விளக்கினர்.

# எண்ணெய் வித்துப் பயிர்களில் ஆதிதிராவிட உழவர்களுக்கான பங்கேற்பு முறை விதை உற்பத்தி தொழில்நுட்பப் பயிற்சி



கடலூர், மார்ச் 15

கடலூர் மாவட்டம், பரங்கிபேட்டை ஒன்றியத்தில் உள்ள சின்னகுமட்டி கிராமத்தில் 15.03.25 அன்று, எண்ணெய் வித்துப் பயிர்களில் ஆதிதிராவிட உழவர்களுக்கான பங்கேற்பு முறை விதை உற்பத்தி தொழில்நுட்பப் பயிற்சி நடைபெற்றது. வேளாண்மை அறிவியல் நிலைய திட்ட ஒருங்கிணைப்பாளர் முனைவர் க. நடராஜன், இப்பயிற்சியை துவக்கி வைத்தார்.

தொழில்நுட்ப உரைகள் முனைவர் க. கலைச்செல்வி (உழவியல்), எண்ணெய் வித்துப் பயிர்களில் உழவியல் தொழில்நுட்பங்கள் பற்றி விரிவாக எடுத்துரைத்தார். முனைவர் கி.பாரதிகுமார் (பயிர் மரபியல் துறை), எண்ணெய் வித்துப் பயிர்களில் புதிய இரகங்களை விவசாயிகளுக்கு எடுத்துரைத்தார்.

முனைவர் ச.கண்ணன் (உணவியல் துறை), எண்ணெய் வித்துப் பயிர்களில் மதிப்பு கூட்டுதல் பற்றி தெளிவாக விளக்கினார். முனைவர் ஜெ.ஜெயகுமார் (நூற்புழுவியல் துறை), எண்ணெய் வித்துப் பயிர்களில் பூச்சி மற்றும் நோய் மேலாண்மை பற்றி தெளிவாக விவசாயிகளுக்கு கூறினார்.

மேலும் இப்பயிற்சியில் தேசிய உர நிறுவனம் சார்பாக இரகுபதி ராஜா, உதவி பகுதி மேலாளர் கலந்து கொண்டு இயற்கை உரங்கள் பற்றிய விழிப்புணர்வு ஏற்படுத்தினார். இப்பயிற்சியில் கடலூர் மாவட்டத்தை சேர்ந்த 30-க்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்து கொண்டு பயன் பெற்றனர்.

**மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!**

# ஆலத்தூரில் வேளாண் புல மாணவர்கள் ஊரக வேளாண் பணி அனுபவம்



பெரம்பலூர், மார்ச் 15

பெரம்பலூர் மாவட்டம், ஆலத்தூர் வட்டத்தில், சமயபுரம் தனலட்சுமி சீனிவாசன் பல்கலைகழகத்தின் வேளாண் புல இறுதியாண்டு மாணவர்கள், வேளாண்மை பாடநெறியான (RAWE) ஊரக வேளாண்மை பணி அனுபவத்திற்கான துவக்க விழா நடத்தினர்.




இவ்விழாவில் ஆலத்தூர் வட்டார வேளாண் உதவி இயக்குனர் கி.பச்சியம்மாள், சமயபுரம், தனலட்சுமி சீனிவாசன் பல்கலைகழகத்தின் பதிவாளர் முனைவர் தனசேகரன் தேவராஜ், சமயபுரம், தலைட்சுமி சீனிவாசன் பல்கலைகழகம் வேளாண் புல முதன்மையர் முனைவர் க.சோழன் மற்றும் தலைட்சுமி சீனிவாசன் பல்கலைகழகம் வேளாண் விரிவாக்கத்துறை பேராசிரியர்கள் முனைவர் செ.தினேஷ் குமார், முனைவர் பி.வைஷ்ணவி மற்றும் குழு ஒருங்கிணைப்பாளர்கள் முனைவர் த.பிரதீப் குமார், முனைவர் இரா.காமராஜ் கென்னடி மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டு விழாவினை சிறப்புத்தனர்.

மேலும், இந்நிகழ்விற்கு உயிர் கொடுக்கவும், எம் மாணவ நண்பர்களுக்கு ஊக்கமளிக்கவும் இவ்வுலகத்தின் ஆகச்சிறந்த தோழிலாம் வேளாண்மை தொழில் செய்து, பயிர் விதைப்பதை உயிராக கருதும் நம் வேளாண் உறவுகளே இந்நிகழ்ச்சியின் அச்சாணி.

தனலட்சுமி சீனிவாசன் பல்கலைக்கழகத்தில் பயிலும் வேளாண் புல இறுதியாண்டு மாணவர்கள், குழு தலைவர் த.அவிஷேக் குழு துணை தலைவர் ர.ராகுல், க.அபிஷேக், ச.கிரிபிரசாத், செ.இறையன்பன், ம.மணிரத்னம், சு.முருகையன், வீ.சரண், செ.சிவா, அ.வருண்ராஜ், ல.வினோத் அனைவரும் வேளாண் உறவுகளுக்கு மரக்கன்றுகளை வழங்கி விழாவை சிறப்பாக நடத்தி முடித்தனர்.

## விவசாயிகளுடன் வேளாண் கல்லூரி மாணவர்கள் கலந்துரையாடல்



திருச்சி, மார்ச் 15

திருச்சி மாவட்டம், வெட்டிக்காடு கிராமத்திற்குட்பட்ட விவசாய நிலங்களில் சமயபுரத்தில் உள்ள தனலட்சுமி சீனிவாசன் பல்கலைகழகம் வேளாண்மை கல்லூரி மாணவர்கள் கிராம அனுபவ பயிற்சிக்காக விவசாயிகளிடம் கலந்துரையாடினர்.

மேலும் அந்த ஊரில் பயிரிடப்படும் பயிர்கள் மற்றும் மேலாண்மை முறைகள் குறித்து மாணவர்கள் விவசாயிகளிடம் கேட்டறிந்தனர்.

இதில் கடலை பயிரிட்ட பெண் விவசாயிகளிடம் பயிரிடும் முறை மற்றும் ரகங்கள், களை மேலாண்மை முறை மற்றும் பூச்சி மற்றும் நோய் கட்டுப்பாட்டு முறைகளையும் அறுவடை செய்யும் முறை மற்றும் சந்தை விலை நிலவரம் உள்ளிட்ட பல்வேறு தகவல்களை கேட்டறிந்தனர். மேலும், உளுந்து பயிரிட்டிருந்த அமை விவசாயி மாரியப்பன் என்பவரிடம் பயிரிட்ட ரகங்கள் மற்றும் களை மேலாண்மை முறை, பூச்சி மேலாண்மை முறை, நோய் மேலாண்மை குறித்து மாணவர்கள் கேட்டறிந்தனர்.

தொடர்ந்து, மாணவர்கள் விவசாயிகளுக்கு எதிர்ப்பு திறன் உள்ள ரகங்கள் பற்றியும், இயற்கை முறையில் பூச்சி மற்றும் நோய் கட்டுப்படுத்தும் முறைகள் குறித்தும், மேலாண்மை முறைகளையும் பரிந்துரை செய்தனர்.

# ஆப்பிள் சான் ஜோஸ் ஸ்கேல் [Quadraspidiotus perniciosus] ஒருங்கிணைந்த பூச்சி மேலாண்மை

நேற்றைய தொடர்ச்சி...

**பூச்சி எதிர்ப்பு விளைவுகள் (Pheromone traps)**

● சான் ஜோஸ் ஸ்கேல் பெரோமோன் பூச்சிகளை சுய நிறுவனங்கள் (Pheromone trap) மூலம் ஈர்க்கி வேகமாக பிடிக்கலாம்

● இது அவற்றின் வருகையை கண்காணிக்கும் பரவலை தடுக்கும் உதவுகிறது

**தோட்ட பராமரிப்பு (Cultural Practies)**

● மரங்களில் சூழல் சீரமைப்பு மற்றும் பராமரிப்பு முறைகள் வெவ்வேறு காலங்களில் செயல்பட வேண்டும்

● மரத்தின் அடிப்படை ஆரோக்கியத்தை மேம்படுத்த மரங்களை சீராக பராமரித்தல் மற்றும் சரியான தண்ணீர் உரம் வழங்குதல் முக்கியமாகும்

**செயலான இயற்கை சிகிச்சைகள்**

**நீரற்ற பூச்சி ஆயுதங்கள்**

● வேப்பெண்ணெய் மற்றும் ஆர்கானிக் பொருட்களாகியவை சான் ஜோஸ் ஸ்கேல் பூச்சிகளை விரட்ட உகந்தவை

● வேப்பெண்ணெய் பூச்சிகளின் வெற்றிடங்களை அடைந்து அவற்றின் வளர்ச்சியை தடுக்கிறது

● ஒரு விதமான வேப்ப எண்ணெய் + நீர் ஊற்றிய பின்னர் மரத்தில் பூசுங்கள்

**சர்க்கரை மற்றும் உப்பு கலவை**

● சர்க்கரை மற்றும் நீர் கலவை மூலம் பூச்சிகளின் மேற்பரப்பில் பூசுங்கள்

● இது பூச்சிகளை கிழித்து விடவும் பூச்சி அட்டை உராய்வு ஏற்படுத்துகிறது

**புதினா எண்ணெய்**

● புதினா எண்ணெய் பூச்சிகளை விரட்ட உதவுகிறது. இது இயற்கை பூச்சி விரோதியாக செயல்படுகிறது.

● 1/4 கப் புதினா எண்ணெய் மட்டும் ஒரு லிட்டர் நீர் கலக்கி மரத்தில் பூசலாம்.

**இயற்கை பூச்சிக்கொல்லிகள்**

● கொம் போஸ் பூச்சிக்கொல்லிகள் போன்ற உயிரியல் பூச்சிக் கொல்லிகள் பயன்படுத்தும்போது பூச்சி வளர்ச்சி கட்டுப்படுகிறது.

● இதில் பொருள்கள் குறைந்த திரவத்தில் செயல்படும் அதாவது மரங்களின் ஆரோக்கியத்திற்கு குறைவான பாதிப்பை ஏற்படுத்தும்.

**அழுத்த நீர்**

● அழுத்த நீர் பயன்படுத்தி பாதிக்கப்பட்ட கிளைகளையும், பழங்களையும் துல க்கியால் சில இளங்குழிகள் மற்றும் ஒட்டிய பூச்சிகளை நீக்கலாம்.

● இது ஒரு இயற்கை வழியாக, பூச்சிகளுக்கு இடைவிடாத செயல்பாடுகளை தடுக்க உதவுகிறது.

**இயற்கை பூச்சி விரோதிகள்**

● ஒட்டுண்ணி பூச்சிகள் போன்ற உயிரினங்கள் சான் ஜோஸ் ஸ்கேல் எதிராக செயல்படுகின்றன.

● (Encarsia perinciosi) போன்ற பாராசிட்டேடுகள் சான் ஜோஸ் ஸ்கேல் லை அழிக்க உதவுகின்றன.

**முதன்மை கவனிக்க வேண்டியவை**

● இயற்கை சிகிச்சைகளின் முழு பயன் பெற செயல்படுத்தும் நேரம் முக்கியம்.

● இளங்குழிகள் வெளியே வரும்போது இந்த சிகிச்சைகளை அதிக விளைவுகள் கொடுக்கின்றன.

● அம்சங்களை மீறாமல் இயற்கை முறைகளை முழுமையாக பயணமாக்குவது அவசியம்.

கட்டுரையாளர்கள் : **பிருந்தா, நான்காம் ஆண்டு (2021 Batch) மற்றும் முனைவர் செ.பழனிவேல், இமயம் வேளாண்மை மற்றும் தொழில்நுட்பக்கல்லூரி, துறையூர், திருச்சிராப்பள்ளி.**

**முற்றும்.**

# நமது வீட்டிலே வளர்கலாம் வெந்தைய "மைக்ரோகிரின்" நுண் தண்டு இலைக் கீரைகள்!

வெந்தயம் நுண் இலை (மைக்ரோகிரின்) கீரைகள் மிக சாதாரணமாக நமது வீட்டிலேயே வளர்க்கலாம்.

**எப்படி வளர்க்கலாம் என்பது பற்றி பார்ப்போம்!**

முதலில் வெந்தையத்தை 12 மணி நேரம் ஊறவைத்து தொடர்ந்து 36 மணி நேரம் முளைக்கட்ட வேண்டும். முளை கட்டிய விதைகளை 5 செ.மீ ஆழம் கொண்ட தட்டில் அல்லது தண்ணீர் கோப்பையில் 3 செ.மீ (1 பங்கு மண்+1 பங்கு இயற்கை உர கலவை) மண் நிரப்பி இதில் முளைக்கட்டிய விதைகளை சமமாக பரப்பி, அவற்றின் மீது மண் சிறிது தூவி விடவேண்டும். தண்ணீர் தெளித்து 24-48 மணி நேரம் பிளாஸ்டிக் பை அடைபட்ட சூழலில், அல்லது அறை வெப்ப நிலையில் வைத்தால் நன்றாக முளைக்கும்.

தொடர்ந்து பிளாஸ்டிக் பையை நீக்கிய பின்பு தினமும் காலை, மாலை இரண்டு முறையும் மிதமான நீர் தெளிக்கவும்.



நேரடி வெயிலில் வைக்காமல், மறைமுக ஒளி கிடைக்கும் அறையில் ஓர் இடத்தில் வைக்கவும்.

அறுவடை: 7–14 நாட்களில், 2– 4 இலைகள் வளர்ந்தவுடன், பச்சையாக வெட்டி உணவில் பயன்படுத்தலாம். சிறந்த ஊட்டச்சத்துக்கள் கொண்டவை.

இந்த கீரை மிகுந்த ஆரோக்கிய நன்மைகளை வழங்குகிறது.

**அதன் முக்கிய பயன்கள் பற்றி பார்க்கலாம்!**

உடல் நலத்திற்கான சத்து செறிவு – இது புரதம், நார்சத்து, இரும்புச்சத்து, கால்சியம், பொட்டாசியம் மற்றும் வைட்டமின்கள் (A, C, K) நிறைந்துள்ளது.

இரத்த சர்க்கரை கட்டுப்பாடு – வெந்தய மைக்ரோகிரின் இன்சுலின் செயல்பாட்டை மேம்படுத்துவதால், சர்க்கரை நோய் (diabetes) உள்ளவர்களுக்கு பயனளிக்கிறது.

மிகுந்த ஆன்டி–ஆக்ஸிடெண்ட் – இது உடலில் உள்ள நச்சுச்சத்துகளை நீக்கி நோயெதிர்ப்பு சக்தியை அதிகரிக்கிறது.

மார்பக பால் சுரப்பு – பரம்பரியமாக, தாய்ப்பாலூட்டும் பெண்களுக்கு வெந்தயம் பால் உற்பத்தியை அதிகரிக்க உதவும் என்று கருதப்படுகிறது.

மாரடைப்பு அபாயம் குறைப்பு – இதன் நார்சத்து மற்றும் ஒமேகா–3 கொழுப்பு அமிலங்கள் இரத்தக் கொழுப்பை கட்டுப்படுத்த உதவுகின்றன.

ஜீரண சக்தி அதிகரிப்பு – இது குடல் நலத்தை மேம்படுத்தி மலச்சிக்கல் மற்றும் அஜீரணத்தைத் தவிர்க்க உதவுகிறது.

முடி வளர்ச்சிக்கு சிறப்பு – வெந்தயத்தில் உள்ள பைட்டோ நியூட்ரியண்ட்கள் (phytonutrients) முடி உதிர்வை குறைத்து, வளர்ச்சியை மேம்படுத்துகின்றன.

எனவே வீட்டில் மைக்ரோகிரின் வளர்த்து இதனை உணவில் சேர்த்து நம் உடல் நலம் பெறலாம்.

தகவல் : **இயற்கை உணவு ஆர்வலர், கோவில்பட்டி கோ.சுரேஷ்குமார்.**

தலைக் கவசம் உயிர்க் கவசம்


100% LEAD FREE PIPE
Rithvik Pipe
25 YEARS WARRANTY
PVC PIPES | PLUMBING PIPES | UPVC PIPES | CONDUIT PIPES | BOREWELL PIPES
WATER TANKS
இந்தியாவின்
தலைச்சிறந்த ISI PVC PIPE
இந்த QR CODE - ஐ SCAN செய்து உங்களது PVC PIPE TEST REPORT SAMPLE - ஐ பெற்றுக்கொள்ளுங்கள்
Rithvik Pipe 63mm 0.4 MPa Class-2 (4.0Kg/cm
ஈடில்லா பலம்
குறைவில்லா தரம்
மேலும் விவரங்களுக்கு
9645877721